VOLUME: 1
ISSUE: 1
ISSN: xxxx-xxxx
Jul - Sep 2018

KAMARAJ JOURNAL OF ACADEMIC RESEARCH
An International, Online, Open Access, Peer Reviewed, Multi-disciplinary Journal

**Subject:**

**TAMIL**

**Title of Original Research Paper:**

# புறநானூறு சுட்டும் மனித உரிமைகள்

**Author:**

**திருமதி. அ. திலகவதி, உதவிப்பேராசிரியை, தமிழ்த்துறை, காமராஜ் கல்லூரி, தூத்துக்குடி.**

**Assistant Professor, Kamaraj College, Thoothukudi – 628 003, Affiliated to Manonmaniam Sundaranar University, Abishekapatti, Tirunelveli – 627 012, Tamil Nadu, India.**

**முன்னுரை:**

மனிதர்கள் பகுத்தறிவு உடையவர்கள். மனித சமுதாயத்தின் உறுப்பினர்கள் என்ற வகையில் அவர்கள் அடிப்படையான மற்றும் பிரிக்க முடியாத உரிமைகளைப் பெற்றுத்திகழ்கின்றனர். தங்கள் அடிப்படைத் தேவைகளைப் பெறுவதற்கும், வாழ்க்கையைச் செம்மைப்படுத்திக் கொள்வதற்கும் இந்த உரிமைகள் அவர்களுக்குத் தேவைப்படுகின்றன. இத்தகைய உரிமைகளே மனித உரிமைகள் எனப்படுகின்றன.

மனித உரிமை என்பதற்கான விளக்கத்தை அவ்வளவு எளிதாக விவரித்து விட முடியாது. எளிதானது என்ற கண்ணோட்டத்தில் பார்த்தால் மனித உரிமைகள் என்பவை மனிதர்களின் உரிமைகள் என்று சாதாரணமாகச் சொல்லிவிடலாம். ஒவ்வொரு மனிதனுக்கும் எந்தெந்த உரிமைகளுக்கு இயற்கையாகவே உரிமை உண்டோ, எந்தெந்த உரிமைகள் பாதுகாப்புக்கு உரியனவோ, அவற்றையே மனித உரிமைகள் என்று வரையறுக்கிறோம். அத்தகைய உரிமைகளைப் பற்றித் தெரிந்து கொள்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**சிந்தனை உரிமை:**

கிள்ளிவளவன் மலையமான் குழந்தைகளை யானையின் முன் இட்டுக் கொல்ல முயன்றான். கோவூர்கிழார் என்னும் புலவர், புறாவின் துயரமின்றியும் பிற துயரங்கள் பலவற்றையும் நீக்கியவர்களின் மரபைச் சேர்ந்தவன் நீ! இவரோ, கற்றோர் வறுமை அடையாதவாறு தம் விளைபொருளைப் பகுத்து உண்ணும் குளிர்நிழல் வாழும் மரபினர்! யானையைக் கண்டதும் தம் இளமையால் மகிழ்பவர்.

அழுகையையும் மறந்து நிற்பவர். மிக்க சிறுபிள்ளைகள்! கூடியிருப்போரைப் புதியவராகக் கண்டு வருந்தும் புதியதோர் வருத்தமும் உடையவர் என்று குழந்தைகளின் இயல்பை எடுத்துக்கூறி கிள்ளிவளவனைச் சிந்திக்கும்படிச் செய்து, அக்குழந்தைகளைக் காப்பாற்றினார். இதனை,

**நீயே, புறவின் அல்லல் அன்றியும், பிறவும்,**
**இடுக்கண் பலவும் விடுத்தோன் மருகனை!**
**இவரே, புலனுழுது உண்மார் புன்கண் அஞ்சித்,**
**தமதுபகுத்து உண்ணும் தண்ணிழல் வாழ்நர்!**
**களிறுகண்டு அழுஉம் அழாஅல் மறந்த**
**புன்றலைச் சிறாஅர் மன்று மருண்டு நோக்கி**
**விருந்திற் புன்கண்நோ வுடையர்!**
**கேட்டனை யாயின், நீ வேட்டது செய்ம்மே! (புறம்-46)**

என்ற பாடல் மூலம் அறியலாம்.

**கல்வியுரிமை:**

மனிதனை விலங்குகளில் இருந்து பிரித்து, மனிதனை மனிதனாக்குவது கல்வியே! மனிதனது பண்பாட்டிற்கும் நாகரிகத்திற்கும் அடிப்படையாக அமைவதும் அதுவே! அரசனுக்கு தன்னாட்டில் மட்டும் சிறப்புண்டு. ஆனால் கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு. கல்வியானது ஏழு பிறவிகளிலும் தொடர்ந்து வந்து பாதுகாப்பு அளிப்பது. அது செல்வத்தைப் போல் அழியாது. திருடர்களால் திருடவோ, தீ, வெள்ளம் முதலியவற்றால் அழியவோ செய்யாது. கொடுக்கக் கொடுக்கப் பெருகுமே அன்றிக் குறையாது. ஒரே குடியில் பிறந்தவர்கள் ஆயினும் அவர்களுள் வயதில் மூத்தவர் என மதியாமல் அறிவில் மூத்தவரையே மக்கள் போற்றுவர்; ஒரே தாய் வயிற்றுக் குழந்தைகள் ஆயினும் அறிவுடையவனையே தாயும் அதிகம் விரும்புவாள். கீழ்க்குலத்தவனாயினும் கல்வியறிவு பெற்றுவிட்டால் மேற்குலத்தவனும் அவனை மதிப்பான் என்பதை,

**“உற்றுழி உதவியும், உறுபொருள் கொடுத்தும்,**
**பிற்றைநிலை முனியாது, கற்றல் நன்றே!**
**பிறப்புஓர் அன்ன உடன்வயிற்று உள்ளும்,**
**சிறப்பின் பாலால், தாயும் மனம் திரியும்;**
**......................................................................**
**கீழ்ப்பால் ஒருவன் கற்பின்,**
**மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே (புறம்-183)**

என்ற பாடல் மூலம் அறியலாம்.

**பேச்சுரிமை:**

வறுமைதீர புரவலர்களைப்பாடிப் பரிசில் பெற மன்னர்களை நாடிச் செல்வது புலவர்களின் இயல்பு. ஒருநாள், வறுமை வயப்பட்ட பெருஞ்சித்திரனார் என்னும் புலவர் வெளிமான் என்னும் மன்னனை நாடிச் சென்றார். அவன் தூங்கிக் கொண்டிருந்தான். தம் தம்பியிடம் பரிசில் கொடுக்க அறிவித்தான். அவன் சிறிது பொருள்கொடுக்க அதனை ஏற்காது, பின்னர் குமண வள்ளலைப் பாடி பெரும்பரிசு பெற்றார். குமண வள்ளல் கொடுத்த யானையை வெளிமானின் கடிமரத்தில் கட்டிச்சென்றார். இது பெருஞ்சித்திரனார் வெளிமானை இகழ்ந்ததற்குச் சமமாகும். இதனை,

**"இரவலர் புரவலரை நீயுமல்லை**
**புரவலர் இரவலர்க்கு இல்லையும் மல்லர்**
**இரவலர் உண்மையும் காணினி இரவலர்க்கு**
**ஈவோர் உண்மையும் காணினி நின்னுயிர்க்**
**கடிமரம் வருந்தத் தந்துயரம் பிணித்த**
**நெடுநல் யானை எம் பரிசில்**
**கடுமான் தோன்றல் செல்வல் யானே"** **(புறம்-162)**

என்னும் பாடலில் பெருஞ்சித்திரனார் தன்னைப்பாராது பரிசளிக்கச் சொன்ன வெளிமானை இகழ்ந்து உரைத்தது மட்டுமின்றி அவனைப் பலரறிய இழிவுபடுத்த அவனது கடிமரத்தில் யானையைக் கட்டிச் சென்றதை அறியலாம். மேலும்,

**"விரைந்து தொழில்கேட்டும் ஞாலம் நிரந்தினிது**
**சொல்லுதல் வல்லார்ப் பெறின்"** **(குறள்-648)**

நாம் சொல்ல நினைக்கும் கருத்துக்களை ஒழுங்குபடுத்திச் சொல்ல வேண்டிய முறைப்படி இனிமையாகச் சொல்லக்கூடியவர்களின் பேச்சைக் கேட்டு அதன்படி நடக்க உலகம் காத்துக்கிடக்கும் என்று வள்ளுவர் கூறுவதை அறியலாம்.

**கிளர்ச்சி உரிமை:**

அரசால் பாதிக்கப்பட்டது ஏழைக்குடிமகனாக இருந்தாலும், அவன் அரசுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்ய உரிமை உண்டு.

அதியமான் நெடுமான் அஞ்சியை நாடிச்சென்ற ஔவையாருக்கு பரிசில் நீடித்த காலத்தில், பரிசிற் பயன்கொண்டு, தாம் நினைத்ததை முடிக்கும் வலிமை பெற்ற நெஞ்சமும், மேம்பாட்டினைப் பெற வருந்தும் இயல்பு உடைய பரிசிலர்க்கு, அடையாத வாயிலோனின் காவலனே! நெடுமான் அஞ்சி தன் தரமறியானோ? அன்றி, எம் தரமும் அறியானோ? அறிவும் புகழும் உடையவர் பசியால் இறந்தார் எனும் வறுமையுற்ற உலகம் அன்று இது. அதனால் இசைக்கருவிகள் கொண்ட எம்காவினைத் தூக்கினேம்; முட்டுக்களைக் கட்டினேம், மரந்துணிக்கும் தச்சனின் தொழில்வல்ல மக்கள் காட்டுக்குச் சென்றால், ஏதாவது ஒரு மரம் கிடையாது போகுமோ? அது போலப் பரந்த இவ்வுலகிலே, எந்தத் திசையிலே சென்றாலும், அந்தத்

திசையில் எமக்குச் சோறும் தட்டாது கிடைக்கும் என்று நின் வேந்தனிடம் அறிவிப்பாயாக என்று ஔவையார் கூறுவதை,

**“வாயி லோயி! வாயி லோயி!**

**........................................................**

**கடுமான் தோன்றல் நெடுமான் அஞ்சி**

**தன் அறி யலன்கொல்? என்னறி யலன்கொல்?**

**அறிவும் புகழும் உடையோர் மாய்ந்தென,**

**வறுந்தலை உலகமும் அன்றே; அதனால்,**

**காவினெம் கலனே; சுருக்கினெம் கலப்பை;**

**மரங்கொல் தச்சன் கைவல் சிறாஅர்**

**மழுவுடைக் காட்டகத்து அற்றே;**

**எத்திசைச் செலினும், அத்திசைச் சோறே!** (புறம்-206)

என்னும் பாடல் வழி அறியலாம்.

**உழைப்புரிமை**

**“முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை**

**இன்மை புகுத்தி விடும்”** (குறள்-616)

விடாமுயற்சியானது ஒருவனது செல்வத்தை மேலும் பெருகச் செய்யும். முயற்சியின்றிச் சோம்பியிருத்தல் அவனுக்கு மிகுந்த வறுமையை உண்டாக்கும் என்கிறார் வள்ளுவர். வீட்டையும், நாட்டையும், உலகத்தையும் திருத்தி அளவற்ற அற்புதங்களை ஆற்றுவது முயற்சியே. ஒருவனது சோம்பலிலே கரிய மூதேவி வாழ்கிறாள். முயற்சியிலே அரிய திருமகள் வாழ்கிறாள். முயற்சி இல்லாதவன் பிறருக்கு உதவி செய்தல் என்பது வீரமில்லாதவன் தன் கையில் வாளேந்திப் போர்புரிவதற்கு ஒப்பாகும்.

**முடிவுரை:**

சட்டத்தின் முன் அனைவரும் சமம். குடிமக்களிடையே மதம், இனம், சாதி, பால், பிறப்பிடம் என்ற காரணத்தால் வேறுபாடுகள் ஏற்பட்டுள்ளன. ஒவ்வொரு குடிமகனின் திறன் வளர்ச்சிக்கு சிந்தனையுரிமை, பேச்சுரிமை, கல்வியுரிமை, கிளர்ச்சியுரிமை, உழைப்புரிமை ஆகிய அடிப்படையுரிமைகள் இன்றியமையாதவை என்பதை இக்கட்டுரையின் மூலம் அறிய முடிகிறது.